பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU
50 சதம்

மலர் 23 வைகாசி 2 ஜூ-ஆகிஸ் 29 இதழ் 95
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 15-5-80

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
19.. -5
PERIODICALS DIVISION
LIBRARY

## தமிழக தலைமைச் செயலக ஊழியர்கள் வேலை நிறுத்தம்!

### கைவிடுமாறு அரசு வேண்டுகோள்

சென்னை, மே 14

தமிழக அரசின் தலைமைச் செயலக ஊழியர்களை, வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் வேலைக்குத் திரும்புமாறு தமிழ்நாடு கவர்னர் திரு பிரபுதாஸ் பட்வாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பத்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மூன்று தினங்களாக வேலைநிறுத்தம் செய்துவரும் சுமார் 4000 ஊழியர்களையும் பொதுநலன் கருதி வேலைக்குத் திரும்புமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

ஊழியர்கள் முன்வைத்துள்ள பத்துக்கோரிக்கைகளில

(8-ம் பக்கம் பார்க்க)

# வீட்டுப் பாவனைகளுக்கான மின்கட்டணம் அதிகரிப்பு

## உபதபாலதிபர்க்கு மேலதிக அலவன்ஸ்

### வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

(நமது கொழும்பு நிருபர்)

மின்சார உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து வீட்டுப் பாவனைகளுக்கான மின்சாரக் கட்டணங்களை அதிகரிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்ட போதிலும் இக்கட்டண அதிகரிப்பை எப்போதிருந்து அமுலுக்கு கொண்டு வருவதென எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இத்தகவலை அமைச்சரவைக் கூட்டங்கள் தொடர்பான செய்திகளை வழமைபாகவெளியிடும் ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகைதிருபர்களுக்குத் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி புதிய கட்டணங்கள் பின்வருமாறு இருக்கும்.

முதல் 50 யுனிற்றுகளுக்கும் ஒவ்வொரு யுனிற்றுக்கும் 35 சதம், 51-350 யுனிற்றுகளுக்கு ஒவ்வொரு யுனிற்றுக்கும் 45 சதம், 351க்கு மேற்பட்ட ஒவ்வொரு யுனிற்றுக்கும் 70 சதம்.

பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கான கட்டணங்களையும் அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவித்த அமைச்சர் திரு. அல்விஸ் இதுதொடர்பாக எந்தமுடிவும் எடுக்கப்படவில்லை என்றார்.

உபதபாற்கந்தோர் அதிபர்களுக்கு மேலதிகமாக அலவன்ஸ் வழங்குவதென்றும் அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. இதன் பிரகாரம் 'ஏ' தரத்திலுள்ள உபதபாற் அதிபர்களுக்கு 75 ரூபாவும், 'பி' தரத்திலுள்ளவர்களுக்கு 50 ரூபாவும் வழங்கப்படும் அதே வேளையில் இவர்களது சம்பளத்தை அதிகரிக்குமாறும் சம்பள மீளாய்வுச் சபைக்கு சிபாரிசு செய்வதெனவும் அமைச்சரவை முடிவுசெய்துள்ளது. (ம-கு)

## 54 கோடி ரூபா செலவில் புதிய வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்த தேசிய வீடமைப்புத்திட்டங்களிற்கு 54 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்குவதென அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

பிரதமர் அறிமுகப் படுத்திய சுயஉதவி வீடமைப்புத்திட்டத்திற்கு 8 கோடி 90 லட்சம் ரூபாவும், நகர வீடமைப்புத் திட்டத்திற்கு 40 கோடி 60 லட்சம் ரூபாவும் அரச ஊழியர் வீடுதிக்கு 5 கோடி ரூபாவும் செலவிடப்படும். (ம-கு)

## மட்டு. மாவட்ட மந்திரியாக 'தஹா' நியமிக்கப்படலாம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் திரு. எம் கனகரத்தினம் காலமானதைத்தொடர்ந்து காலியாகியுள்ள மாவட்ட அமைச்சர் பதவிக்கு காலி எம். பி. கலாநிதி டபிள்யு. தகநாயக்கா நியமிக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புயலால் சேதமடைந்த மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி வேலைகள் துரிதமாய் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் மாவட்ட மந்திரி உடனடியாக நியமிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திடம்சுட்டிக் காட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திரு. கனகரத்தினம் போல் திறம்பட செயல்படக்கூடிய ஒருவர் மாவட்ட மந்திரியாய் நியமனம் செய்யப்படவேண்டுமென்பதன் பிரகாரம் திரு. தகநாயக்கா நியமனம் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. பரீத் மீராலெப்பை மாவட்டமந்திரி பதவியேற்க மாட்டாரென தெரியவருகிறது. (கு)

## தொண்டைமானாறு ப.நோ.கூ.ச. கொள்ளை

# தலைமறைவான சந்தேகநபர் வல்வை பொலிசில் சரண்!

### பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவரா?

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கொள்ளை தொடர்பாக கடந்த 3 வருடங்களாக பொலிசாரால் தேடப்பட்டுவந்த 3-வது சந்தேகநபர் தனது தாய் மூலம் நேற்று முன்தினம் பொலிசில் சரணடைந்துள்ளார்.

பொலிசில் சரணடைந்துள்ள தொண்டமானாற்றைச் சேர்ந்த அமிர்தலிங்கம் ராஜ்குமார் (30 வயது) பயங்கரவாத இயக்கமொன்றினைச் சேர்ந்தவர் எனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## வங்கிக் கொள்ளை முயற்சி வழக்கு

# சாட்சிகள் வராததினால் விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்க் கிராமியவங்கிக் கொள்ளை முயற்சி வழக்கு, யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு, சாட்சிகள் சிலர் வராதகாரணத்தினால் ஆனிட் 11ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

இவ்வழக்கில் 74 ஜூன் 5ம் திகதி கோப்பாயில் பி சிவகுமாரனுடன் சேர்ந்து உயிராபத்து விளைவிக்கும் ஆயுதங்களுடன் கிராமியவங்கியின் ஜெயஸ்வரி சுப்பிரமணியம் என்பவரின் பொறுப்பிலிருந்த பணத்தையும், உடமைகளையும் கொள்ளையடிக்க முயற்சித்த

(8ம் பக்கம் பார்க்க)

ராகு, கேது மாற்றம்
உங்களுக்கு எப்படி?
'சோதிடபரிபாலினி
யை இன்றே வாங்கிப் படியுங்கள்.
பல அரிய சோதிட விஷயங்களுடன்
வைகாசி மாத சோதிடபரிபாலினி இதழ்
வெளிவந்துள்ளது
பிரதி விலை ரூபா 2-50 மட்டுமே
சோதிட விலாச புத்தகசாலை
46, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8083
(57)

## தென்கொரியாவில்

# மாணவர்-ராணுவம் மோதல்!

### அரசியல் மாற்றம் கோரி ஆர்ப்பாட்டம்

சோல், மே 14

தென்கொரியாவில் மாணவர்களுக்கும் ஆயுதப்படையினருக்குமிடையே இடம்பெற்ற [illegible] ஆயுதப்படையினர் நகரில் 1977-ம் ஆண்டு பலத்த காவல் புரிந்து வருகின்றனர்.

ஜனநாயக அடிப்படையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 1பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: பெருமாள்பிள்ளை பாலசேஸ்வரன், 6/5, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர். 5765

### தேவை

நல்ல அனுபவமுள்ள தேநீர் தயாரிப்பாளர் உடன்தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில்வரவும். கபே பூம்புகார், 116, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 5758

கண்ணாடித் தொழிற்சாலையில் அனுபவமுள்ள ஊதுவோர் (Bubblers) செல்ப்பர் (Helpers) புளோவர் (Blowers) போன்றவர்களுக்கு வெற்றிடங்கள் இருக்கின்றன. அத்துடன் வேலை பழகுபவர்களும் (Trainees) எடுக்கப்படுவார்கள் உடன் நேரில் வரவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ் நீர்வேலி. 5723

## உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## விளம்பரம்

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சேகரிக்கப்பட்ட 4000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. 22-5-80-ந் திகதிக்கு முன்னர் ரூபா 100/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளவும். கேள்விப்பத்திரங்கள் யாவும் 28-5-80 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம், வல்வெட்டித்துறை" என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை.

13-5-1980 5771

## நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## கேள்விப்பத்திரம்

### இரட்டைத்திருக்கல் மாட்டுவண்டி விற்பனைக்குண்டு

மேற்படி வண்டில் ஒன்று நல்லநிலையில் எம்மிடம் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர் சங்கத்தலைமைக் காரியாலயத்தில் கடமை நேரத்தில் வண்டியைப் பார்வையிட்டு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் "வண்டில்விற்பனை" எனக் குறிப்பிட்டு 28-5-80க்கு முன் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்

பொதுமுகாமையாளர்,
நல்லூர்
ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

5772

## சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 21-05-80 புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழு நிபந்தனைகளும் 1954-ம் ஆண்டு மேமாதம் 28-ந் திகதி வெளியிடப்பட்ட 10675-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1-ம் பிரிவு 2-ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(1) 1,75,000 காற்சட்டை சிப் பூட்டுகள் (ZIP)

(2) நீளந்த பிடி இலைகள் (3000 இரு. வரை)

எஸ்.எம்.ஜே.சேனாரத்தின,
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
7-5-80. 5716

## இசைவிழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் ரஸிகரஞ்சன சபாவின் 29-வது ஆண்டு இசை விழாவின் 7-ம் நாளான இன்று வியாழக்கிழமை யாழ் மாநகர சபை முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நிகழும் நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு!

மாலை 6-45—8-15 மணி வரை டாக்டர் ரி. சங்கீதரன் வேணுகான இசை திரு. வி கே. குமாரசாமி வயலின் திரு ரி. பாக்கியநாதன் மிருதங்கம் 8 15— 8 30 மணி வரை தலைமையுரை 8-30-10 மணி வரை செல்வி மாலினி ஸ்ரீநிவாசன் பாட்டு- திருமதி பி. ஞானாம்பிகை வயலின் திரு. பி. சின்னராசா மிருதங்கம்.

(கொ-அ)

## "ஆலயங்கள் திறக்கப்படுவது

# முற்போக்கு வாதிகளால் வரவேற்கப்படவேண்டியது"

### மக்கள் கலைஇலக்கியப் பெருமன்றம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பகுதியில் பல இந்து ஆலயங்கள் சகலமக்களினதும் சமத்துவ வழிபாட்டிற்காகத் திறக்கப்படுவது ஒரே முகமாக முற்போக்கு எண்ணங்கொண்ட சகலராலும் வரவேற்கப்பட வேண்டியதாகும். இதை ஏற்று இந்த நடவடிக்கைகளில் தங்களையும் இணைத்துக் கொள்ள மறுக்கும் அல்லது உதாசீனம் செய்யும் கலை இலக்கியவாதிகள் "சமூக மாற்றத்திற்காக எழுதுகிறேன்" என்பது வெறும் போலித்தனமாகும்.

இவ்வாறு மக்கள் கலை இலக்கியப் பெருமன்றத் தலைவர் திரு. கே. டானியல் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது!

"சமீபத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஆலயங்களான சண்டிருப்பாய் கல்வளை பிள்ளையார் ஆலயமும் புதச்செம்மணி பாலமுருகன் ஆலயமும் வேறு சில ஆலயங்களும், சகல மக்களினதும் வழிபாட்டுக்காக திறந்து விடப்பட்டுள்ளமையை மக்கள் இலக்கியப் பெருமன்றம் வரவேற்று பாராட்டுவதுடன் செயல்பாடுகளை விரிவுபடுத்த சகல கலை இலக்கியக்காரர்களும் தங்கள் நடைமுறைகளை அத்திசை நோக்கி விரிவுபடுத்த வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறது.

(கு)

# தனியார் நெல் கொள்வனவு தடை செய்யப்படும்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் காலபோக அறுவடையின்போது தனியார் நிறுவனங்களும் முதலாளிமார்களும் நெல்சந்தைப் படுத்தும் சபையுடன் போட்டி போட்டு நெல் கொள்வனவு செய்துவருவதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கமநலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் மேற்கொண்டு வருகிறார். கமத்தொழில் அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜேரத்தின இதற்கான பணிப்புரையை வழங்கியுள்ளார்.

விவசாயிகளிடமிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபையுடன் போட்டி போட்டு நெல்லைக் கொள்வனவு செய்யும் சில தனியார் 40 ரூபாவை ஒரு புசலுக்கு வழங்கிவரும் அதே நேரத்தில் ஏஜெண்டுமார்கள் 35 ரூபா முதல் 40 ரூபாவரை வழங்குபவர்களாக இருக்கின்றனர்.

வயல்களில் இருந்தும், சூடடிக்கும் இடங்களிலிருந்தும் நேரடியாக நெல்லைச் சேகரிக்கின்றனர் என்ற காரணத்தைக்காட்டி இவர்கள் இவ்விதம் குறைந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்கின்றனர். தனியார் முத்திரையிடப்படாத அளவை புசல்களையும், தகரங்களையும் நெல்லை அளப்பதற்குப் பாவித்துவருவதால் ஒவ்வொரு புசலிலும் சுமார் ஏழு றாத்தல் நெல் விவசாயிகளிடமிருந்து மோசடி செய்யப்பட்டுவருவதால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர் இதனால் கமநலச் சேவை நிலையங்களும் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் நேரடியாக விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யும் திட்டத்தை தீவிரப்படுத்தியுள்ளது.

பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் விவசாயிகளை நேரில் சந்தித்து நெல் சந்தைப்படுத்தும் சபைக் களஞ்சியங்களில் நேரடியாக நெல்லை விற்பனை செய்வதிலுள்ள நன்மைகளைப் பற்றி விளக்கி ஊக்கமளிக்க வேண்டுமென்றும் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விதம் நேரடியாக நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவைப்படும் லொறிகளை மாவட்டங்களிலுள்ள கமநலச் சேவை நிலையங்கள் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கி உதவி புரியவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தின் கட்டிட நிதிக்காக 11-5-80 ஞாயிறு அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த சீட்டிழுப்பு மறுதிகதி அறிவிக்கப்படும்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

நிலையநிர்வாகிகள்
5770

## மரண அறிவித்தல்

### திரு. டோமினிக் மத்தியூஸ்

யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாச நிருவாகசபை உறுப்பினரும், யாழ். கடற்பரப்பியல் பொதுச்சேவை கூட்டுறவு தொழிலாளர் சங்கத் தலைவரும், இல. 11, 2-ம் குறுக்குவீதி, குருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருமாகிய திரு டோமினிக் மத்தியூஸ் காலமாகிவிட்டார். இவர் சலேற்றம்மா அவர்களின் அன்புக் கணவரும், பூலியற், ஜெயசீலன் (நீதிமன்றம், யாழ்ப்பாணம்), லொயலா (Greece), அஞ்சலாதேவி, மேபிள், றிச்செட் (காவல்பகுதி), பெனடிக்ரா (சீநோர், யாழ்) எட்டின் (கடற்றொழில் கூட்டுத்தாபனம்) அன்ரனிற்று, பிறின்ரன்ஸ் ஆகியோரின் அன்புத்தந்தையும், மரியதாஸ் (மாவட்ட விளையாட்டு அதிகாரி, வவுனியா) பேர்மினஸ் (களஞ்சியப் பொறுப்பாளர், சிறைச்சாலை, கோப்பாய்) செல்வரட்ணம் (கிராமசேவகர், தோப்பூர்), வயலற், ரேஸ் மேரி ஆகியோரின் மாமனாரும் யோசேப் (ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) தம்பதிகளின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 15-5-80 வியாழக்கிழமை மாலை 4-30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

5774

## புங்குடுதீவுக்கு "பவுசர்" மூலம் குடிநீர்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு மாதகாலமாகக் குடிநீர் இல்லாது தவித்துக் கொண்டிருக்கும் புங்குடுதீவு மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குலநாயகம் புங்குடுதீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை யாழ். அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து யாழ் அரசாங்க அதிபர் செயலாளரான யோகேந்திராதுரைசுவாமி அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அதனால் புங்குடுதீவு மக்களுக்குப் "பவுசர்" மூலம் குடிநீர் வழங்கப்படும்.

(கொ.அ)

## கோப்பாய் உ. அ. அதிபருக்கு பாராட்டு

(கோப்பாய்)

வலி-கிழக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. சி. அம்பலவாணருக்கு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கோப்பாய்த் தொகுதிக் கிளை பாராட்டுத் தெரிவித்துள்ளது.

எதுவித விசாரணையுமின்றி கோப்பாய்த் தொகுதியில் பாரபட்சமான முறையில் கூப்பன் முத்திரைகள் ரத்துச் செய்யப்பட்டது சம்பந்தமாக மகாசபைக் கிளை பல விபரங்களையும் திரட்டி உதவி அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து அவர் தகுந்த முறையில் நடவடிக்கை எடுத்து உண்மையான விபரங்களைத் திரட்டி ஆராய்ந்து உண்மையாகவே உணவு முத்திரை கொடுபட வேண்டியவர்களுக்கு முத்திரை கிடைக்க வழிசெய்துள்ளமைக்காகவே கிளை அவருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளது.

உணவு முத்திரை விஷயத்தில் பாதிக்கப்பட்டோர் சார்பில் திருவாளர்கள் நா. சு. சுப்புத்துரை, இ. மயில்வாகனம், க. சிவஞானம் ஆகியோர் கிராம ரீதியாக விபரம் திரட்டி உதவினர். (அ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ் மாவட்ட நீதிமன்றத்தில

வழ இல. ஈடு / 14708

பொலிஸ் சேமிப்பு சங்கம்,
Y. M. B. A. கட்டிடம், கொழும்பு.
— வழக்காளி

எதிராக

1 சி. அ. மகாதேவனும் பெண்
2 ஞானம்பிகையும்,
இல 26, ஈச்சமோட்டை கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்
— எதிராளிகள்

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 14708-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1980-ம் ஆண்டு ஆனி மாதம் 5-ந் திகதி (1980-6-05) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் வழக்காளிக்கு ரூபாய் 9903 சதம் 63-ம், மேலும் ரூபாய் 8575 சதம் 93 வருடமொன்றுக்கு நூற்றுக்கு 6½ வட்டிவீதம் வழக்கு அணைந்த திகதியாகிய 1975-ம் ஆண்டு ஆனிமாதம் 15-ந் திகதியிலிருந்து தீர்வை திகதியாகிய 1977-ம் ஆண்டு தைமாதம் 13-ந் திகதி வரையான வட்டியும், சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபாய் 663 சதம் 05 (இதில் நடைபெற்ற செலவு ரூபா 448 சதம் 90 நடைபெற வேண்டிய செலவு ரூபா 117 சதம் 25, மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 96 சதம் 90) கொடுக்க வேண்டியிருப்பதாலும்

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி கண்டிக்குளி கோவிற்பற்று கண்டிக்குளி இறை; விழாங்குளம் பர நில. இலா ஆறும் (6. விழாங்குளம் புலம் பர. நில, இல - 2 தளி 5¾ இருவகையிலும் நி. ப. 8-ம் குளி 5¾ம் எல்லை கிழக்கும், வடக்கும் நாகமுத்து தருமலிங்கத்தின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு சந்தியோப்பு பிலிப்புவும் யோவான், மடுத்தின் மறுபேருக்கும் உரிய ஆதனங்கள்.

ஏ. ப. பி. எதிர்மன்னசிங்கம்,
பெத்திஸ் கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
107, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். 25-03-1980
5773

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பரப்பிரமம் சத்-சித்-ஆனந்தமயம். பிரம மத்தை அறிந்தால் அதற்குப் புறம்பாக அறிவதற்கு ஒன்றுமில்லை. எனவே பிரம மத்தை அறிய முயற்சி செய்.

—சுவாமி சிவானந்தர்

## மட்டுநகரில் அடுத்தமாதம்

# விபுலானந்தர் இசைக்கல்லூரியை ஜனாதிபதி திறந்துவைப்பார்

(மட்டக்களப்பு)

வித்தகர் விபுலானந்தர் பெயரில் இசைக்கல்லூரி ஒன்றை மட்டக்களப்பில் அமைப்பதற்கான ஏற்பாடுகளை மட்டுநகர் முதல்வரும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சருமான திரு செல்லையா இராசதுரை மேற்கொண்டு வருகிறார்.

யாழ்ப்பாணம் இராமநாதன் இசைக்கல்லூரியைப் போன்று இக் கல்லூரி இருக்கும்.

இக் கல்லூரியை அமைப்பதற்காகப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சினால் 9 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். முதற்கட்டமாக கல்லடி உப்போடை விபுலானந்த ஞாபகார்த்த மண்டபத்தில் தற்காலிகமாக இக்கல்லூரி ஆரம்பிக்கப்படும். அதைத் தொடர்ந்து அருகாமையிலுள்ள இராமகிருஷ்ண மிஷனுக்குரிய காணியில் புதிய கட்டிடங்கள் அமைக்கப்படும்.

இக் கல்லூரிக்கு அதிபராக தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு பொ. சிவானந்தத்தை நியமிக்குமாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்துள்ளார். பேராசிரியர் சிவானந்தம் விபுலானந்த அடிகளாரின் சிஷ்யராவார். வித்தகரின் யாழ் நூலை இசையில் பாடியவர். கடந்த வருடம் செப்டம்பர் மாதம் மட்டக்களப்பில் நடைபெற்ற விபுலானந்தர் முத்திரை வெளியீட்டு விழாவிற்கு இவர் வந்து சிறப்பு இசை நிகழ்ச்சி அளித்தது குறிப்பிடத்தக்கது.

விபுலானந்த இசைக்கல்லூரி திறப்பு விழாவிலும் புதிய கட்டிட அடிக்கல் நடும் விழாவிலும் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார். இவ்வைபவம் அடுத்த மாதம் நடுப்பகுதியில் இடம் பெறும் என அறியப்படுகிறது. (அ)

## மணிமேகலைக்கும் அரச அதிபருக்கும் தொடர்புஎன்ன?

13-05-1980 'ஈழநாடு' இதழில் "மணிமேகலைப் படகுச் சேவை" என்னும் தலைப்பில் வெளிவந்த செய்தியில் உள்ள பொய்களையும் புரட்டுகளையும் பார்த்து வேதனையும் வெட்கமும் அடைந்தேன். மணிமேகலை என்னும் படகு, "வடதாரகை" என்னும் படகு செய்து முடிந்தவுடன் கொழும்பு "லொரின்பாட்" நிறுவனத்தினால் செய்யப்பட்டது. இவ்விரு படகுகளையும் கட்டுவதற்கு முன்னைய அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த திரு. மைத்திரிபால சேனநாயக்கா நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க கட்டளை பிறப்பித்திருந்தார். எனவே இவ்விரு படகுகளும் கட்டப்பட்டதற்கு இந்த அரசாங்கத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. மணிமேகலைப் படகிற்கு நானே பெயர் வைத்தேன் உண்மை நிலைமை! இவ்வாறு இருக்க, அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டு 'மணிமேகலை' என்னும் இயந்திரப் படகைப் பெற்றுக் கொடுத்தார் என்பது வெட்கப்படத்தக்கதன்றோ!

மூன்று படகுகளைக் கட்டிக் கொடுக்கச் செய்வதற்கு மாவட்ட அமைச்சு உடனடி நடவடிக்கை எடுக்கலாமே!

கா. பொ. இரத்தினம்
பா. உ. ஊர்காவற்றுறை தொகுதி.

### மக்கள் கருத்து

அனலைதீவு-நயினாதீவு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 'அலை அரசி' என்னும் படகும் 1978 ம் ஆண்டு தொடக்கம் நான் தொடர்ந்து வற்புறுத்திவந்தமையினாலேயே திருத்தி அமைக்கப்பட்டு இப்பொழுது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. எனவே யாழ்ப்பாண மாவட்ட அமைச்சு தீவுப்பகுதி மக்களின் கடற் போக்குவரத்துக்கு இன்றுவரை எந்தவித சேவையையும் செய்யவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் ஊர்காவற்றுறையில் இருந்து எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு செல்லும் கடற் பயணச்சேவையையும், குறிகாட்டுவான் - நயினாதீவு கடற் பயணச் சேவையையும் இலங்கைப் போக்குவரத்துச் சபையை ஏற்று நடாத்துமாறு நான் போக்குவரத்து அமைச்சர் மாண்புமிகு அல்ஹாஜ் எம். எச். முகம்மது அவர்களையும் வடபிரதேச போக்குவரத்துச்சபையையும் கேட்டுள்ளேன். இந்த விடயத்தில் ஆவனவற்றைச் செய்யுமாறு மாவட்ட அமைச்சருக்கும் எழுதினேன். ஆனால் இன்றுவரை இதுவிடயமாக யாழ். மாவட்ட அமைச்சு எதையும் செய்யவில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

அமைச்சர் முகம்மது அவர்கள் அண்மையில் யாழ். செயலகத்தில் நடாத்திய கூட்டத்திலும் இந்த விடயத்தை மீண்டும் வற்புறுத்தினேன். போக்குவரத்து அமைச்சு இச்சேவைகளை எடுக்கப் பின்நிற்பதால் பெருந்தெருக்கள் திணைக்கள அமைச்சு இச்சேவை இரண்டையும் பொறுப்பேற்று 'மணிமேகலை'யைப் போன்ற

### சாதிமுறையை முற்றாக ஒழிக்க...

உலகப் பிரசித்தமான சிரஞ்சீவி கலை இலக்கியச் சிருஷ்டிகள் யாவும் அடித்தள மக்களின் பிரச்னைகளிலிருந்து எழுந்தவைகளேயாகும்.

இந்த அடிப்படையில் பார்க்கும்போது மனித உரிமையை நோக்கி முன்னேறிச் செல்லும் மக்களை மையமாகக் கொண்டு பிறப்பிக்கப்படும் கலை, இலக்கிய வடிவங்களே எமக்கு இன்று வேண்டப்படுவதாகும்.

தமிழர் பகுதியில் பரவலாக நிலவிவரும் சாதி அடக்குமுறைகளை இன்றுவரை சந்திக்காமலும், பார்க்காமலும் எந்தக் கலை இலக்கியக்காரனும் இருக்க முடியாதெனினும் பல சூழ்நிலைகளுக்கு வயப்பட்டு, அவைகளைப் பார்க்க, சந்திக்கப் பிடிவாதமாக இலக்கியக்காரர்களும், கலைஞர்களும் மறுத்துவந்துள்ளனர் என்பதுதான் உண்மையாகும். வெறும் வாய்ப்பேச்சளவில் பின்தங்கிய மக்களுக்குக் குரல் வைக்கும் கலை இலக்கியகாரன் அதை எழுத்தில்-வடிவத்தில் தரக்கூசி நின்றுள்ளான்.

பின் தள்ளப்பட்டிருக்கும் லட்சக்கணக்கான மக்கள் "எங்களுக்காக நல்மனம் கொண்ட மனிதர்கள் குரல் கொடுக்கமாட்டார்களா?' என்று ஏங்கி நிற்கும் இந்தவேளை கலை, இலக்கியக்காரன் மனிதாபிமானத்துடன் வீறுகொண்டெழுதல் வேண்டும்.

இந்த மனிதாபிமானப் பிரச்னைக்கு முகங்கொடுப்பதற்குப் பதில் இவைகளோடு சற்றேனும் சம்பந்தப்படாத உருவம், உள்ளடக்கம், கலை வடிவம், புதுமை, பரிசோதனை மொழிபெயர்ப்பு, மொழிச்சோரம், தரவு, சோல் என்றெல்லாம் வாதப்பிரதிவாதங்களை எழுப்பும் கலை இலக்கியக்காரனை என்னவென்று சொல்வது?

சமீபகாலத்தில் சாதிமுறை ஒழிப்பின் ஒரு அம்சமாக ஆலயப்பிரவேசங்கள் நடந்து வருவதை மனதில் இருத்தி அதை மேலும் உந்துவித்து, வலுவாக்கும் பணியில் தன்னையும் ஈடுபடுத்தி கலை இலக்கியங்களை எழுத்தாளன் செய்தல் பெருங்கடமையாகும்.

"சாதிக்காக இலக்கியம் செய்பவர்களை எதிர்ப்போம்" என்ற உண்மைக்கும் நடைமுறைக்கும் புறம்பான சித்தனையுடன் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டிருந்த எழுத்தாளர்கள் நிதர்சனமான நடைமுறைகளை ... தாவித்து விழிப்புற ...

நல்மனம்கொண்ட நமது நாட்டுப்பத்திரிகைகளையும், நாடக மேடைகளையும் மற்றைய சாதனங்களையும் துணைவைத்துக் கொண்டு சரிவு கண்டு வரும் சாதிமுறையை அடியோட்டத்தோடு அழித்துவிட செயல்படவேண்டும்.

த. பரமலிங்கம்!
... தட்டுவன்கொட்டி ...

## பாதுகாப்பை விரும்பாத பிரதி அமைச்சர்!

(நமது நிருபர் சு. தர்மசிங்கம்)

(யாழ்ப்பாணம்)

உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் திரு. ஜி எம். பிரேமச்சந்திரா எதுவித பொலிஸ் பாதுகாப்புமின்றி சகல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதி அமைச்சர் நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் இருந்து யாழ். மாவட்ட அமைச்சர் யாழ். அரசாங்க அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோருடன் குறிகாட்டுவான், நெடுந்தீவு நயினாதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று மக்களை நேரில் சந்தித்து மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார்.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்குச் சென்ற பிரதி அமைச்சர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையில் கலந்து கொண்டு காளாஞ்சியைப் பெற்றுக் கொண்டார். ஆலயம் சம்பந்தமான குறைகளை கேட்டறிந்த பிரதி அமைச்சர் அக் குறைகளை நிவர்த்தி செய்து தருவதாக உறுதியளித்தார்.

பிரதி அமைச்சரும் ஏனையோரும் அங்கிருந்து படகில் புறப்பட்டு நயினாதீவிலுள்ள பௌத்த ஆலயத்திற்கும் சென்றனர். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும் வரை அமைச்சருக்கு பொலிஸ் பாதுகாப்போ வேறு எந்தவித பாதுகாப்புமோ இருக்கவில்லை.

பிரதியமைச்சரின்பாதுகாப்பு சம்பந்தமாக நான் அவரிடம் வினவியபோது எமது அரசு சமானத்தையும் சமத்துவத்தையும் விரும்புகிறது. அதனால் எமக்கு இந்த நாட்டில் எதிரிகள் இல்லை எதிரிகள் இல்லாதவரை நாம் ஏன் பயப்பட வேண்டும்'' என்றார்.

"இன்றைய இளைஞர்கள் அபிவிருத்தியில் தான் நாட்டம் கொண்டிருக்கிறார்களே தவிர பயங்கர வாதத்தை விரும்பவில்லை பொலிஸ் பாதுகாப்பிருந்தால் பொதுமக்கள் எம்முன் வரப்பயப்படுவார்கள் அதனால் பொது மக்களுக்கும் அமைச்சர்களுக்கும் இடைவெளி வலுக்கிறது. அவ்வாறான இடைவெளி இருப்பதை இளைஞனான நான் விரும்பவில்லை. விரக்தியுற்ற தமிழ் இளைஞர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவே நாம் விரும்புகிறோம். அதனால் தான் எதுவித பாதுகாப்புமின்றி நான் உங்கள் முன்வந்துள்ளேன்" என்றும் அவர் தெரிவித்தார். (கொ)

# வடக்கில் மிளகாய் உற்பத்தி குறைவு!

## அரசாங்க அதிபர் கவலை

(புலோலி)

அரசாங்கம் விவசாயிகளுக்கு வேண்டிய பசளை, விவசாய இரசாயனப் பொருட்கள் போன்றவையும், ஏனைய உபகரணங்களும் தாராளமாக இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்கி ஊக்கமளிக்கப்பட்ட போதும், யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் மிளகாய்ச் செய்கை அளவில் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டுள்ளதாக யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி கவலை தெரிவித்துள்ளார்.

மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற பாவனைப் பொருட்களின் நுகர்வு விலைகளைக் குறைக்கும் ஒரு நடவடிக்கை

[6ம் பக்கம் பார்க்க]

### நாடும் நடப்பும்

"நீங்கள் மிகவும் சிரமப்பட்டு உங்கள் சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்று வந்திருக்கிறீர்கள். பலகாலம் வெளியிடங்களில் கடமையாற்றிய நீங்கள் சொந்த ஊருக்கு வந்து உங்கள் குடும்பத்தின் நலனைக் கவனிக்க வேண்டியதும் அவசியம் தான் இருக்கும் வீட்டைத் திருத்த வேண்டும். இருக்கிற காணி பூமியில் குடிசையோ வீடோ கட்டவேண்டும் நிலமில்லாதவர்கள் ஒரு துண்டு நிலமாவது வாங்க வேண்டும். பிள்ளைகளின் படிப்பைக் கவனிக்க வேண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தேட வேண்டும். வளர்ந்த பெண்பிள்ளைகளைக் கரைசேர்க்க வேண்டும். இப்படி உங்கள் குடும்ப நிலைமையைப் பற்றிக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று சிந்திப்பதும் அதற்காக முயற்சி செய்வதும் அவசியம் இதில் தவறொன்றுமில்லை. இதனால், நீங்கள் அலுவலகத்துக்குக் கூடச் சிறிது நேரம் பிந்தியும் வரக்கூடும். மாலையில் சிறிது முன்னதாகவே புறப்படவும்கூடும் இடைநேரத்திலும் நீங்கள் வெளியே சென்று வரவும் ஏற்படலாம். இவையும் நான் பெரியகுற்றமாகக் கருதவில்லை. ஆனால் நீங்கள் இரண்டு மணி நேரமாவது உங்கள் ஆசனத்திலமர்ந்து உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தால் அதுவே போதுமானது. இந்த இரண்டு மணி நேரத்தில் எவ்வளவோ முக்கியமான வேலைகளைச் செய்து முடிக்கலாம் நீங்கள் உங்கள் நலனை மட்டும் கவனித்துக் கொண்டு மற்றவர்களை அசட்டை செய்வதால் அவர்கள் எவ்வளவு பாதிக்கப்படுவார்கள் என்பதையும் சிறிது சிந்தித்தால் போதும்'

சில வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு முக்கிய இலாகாவில்பொறுப்பு அதிகாரியாகப் பதவி வகித்தவர் தமது இலாகா ஊழியர்களுக்குக் கூறிய அறிவுரையையே மேலே தந்திருக்கிறேன். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பல அரசாங்க இலாகாக்களில் சிலர் இப்போதும் "ஆற்றி வரும் சேவைகளைப் பார்க்கையில் இப்படி எத்தனைபேர் எத்தனை தடவை அறிவுரை கூறினாலும் சீராகுமா என்றே கேட்கத் தோன்றுகிறது.

ஒரு சிலரின் அசமந்தப்போக்கும் அக்கறையீனமும் உண்மையாக உழைக்கும் ஊழியர்களுக்குமல்லவா வீண் பழியைத் தேடிக்கொடுக்கிறது!

∴ ∴ ∴

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையில் எத்தனை ரயில்கள் சேவைக்கு விட்டாலும் அத்தனை ரயில்களிலும் பக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தபடிதான். பரந்தன், கிளிநொச்சி, வவுனியா வரை வேலைக்குச் செல்பவர்கள் காலை யாழ்தேவியில் ஏறி ஆசனங்களைப் பிடித்துக்கொள்கிறார்கள். ரயில் பெட்டிகளின் வாசலையும் பலர் அடைத்துக் கொண்டு நின்று விடுகிறார்கள். இதனால் கொழும்புக்குச்செல்ல வேண்டிய பிரயாணிகள் பலர் சில சமயங்களில் தங்கள் பயணத்தைத் தட்டிக்கவிட நேரிடுகின்றது. அவர்கள் பெரும் சிரமங்களுக்கும் உள்ளாக நேரிடுகிறது காலை யாழ்தேவி புறப்பட்ட சிறிது நேரத்தின் பின் வவுனியாவரையோ மாங்குளம் வரையோ ஒரு ரயில் சேவைக்குவிடப்பட்டால் நல்லதல்லவா?

---ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னார்க்கரையோரம்

# பெறுமதியான அம்பர்தேடும் வேலை ஆரம்பம்

(மன்னார்)

தற்போது மன்னார்மாவட்ட கடற்கரை யோரங்களில் பல லட்சரூபாய் வருமானம் தரும் அம்பரை தேடும் வேலையில் பலர் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் பேசாலையில் உள்ள மீனவர்கள் சிலருக்கு அம்பர் கிடைத்ததாக அறியப்படுகிறது.

மன்னாரில் தற்போது அம்பர் வியாபாரிகள் காணப்படுகிறார்கள். இலங்கையில் ஒரு இறாத்தல் அம்பர் 15 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்ய முடியும் எனக்கூறப்படுகின்றது.

# மன்னார்ச் செய்திகள்

றது. சோழகக் காற்று வீசத் தொடங்கியதை யடுத்து அம்பர் தேடும் வேலையும் ஆரம்பித்துள்ளது.

## புனர்வாழ்வுத் திட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அரசாங்கம் வழங்கும் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் புனர் வாழ்வுத்திட்டத்திற்காக 7500 ரூபாவை சமூக சேவை திணைக்களம் ஒதுக்கியுள்ளது.

தலா 750 ரூபா வீதம் தெரிவு செய்யப்படும் 10 பேருக்கு வழங்கப்படும். இப்பணத்தைக் கொண்டு சுயமாக தொழில் மூலம் வருவாய் பெறுபவர்களுக்கு உதவியளிக்கப்படும் என மன்னார் சமூக சேவை அதிகாரி திரு தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

## பிரயாணிகள் சங்கம்

(மன்னார்)

மன்னார் தொண்டச்சி பிரயாணிகள் சங்க நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஜனாப் எஸ் அப்துல் காசிம் துணைத்தலைவர் ஜனாப் எஸ் மீராநெயினா (வேப்பங்குளம்) செயலாளர் ஜனாப் எஸ். எம். ஏ வகாப் (மன்னார்) துணைச்செயலாளர் திரு. எஸ். ரொபட் (சிலாவத்துறை) பொருளாளர் ஜனாப் எம். ஆபூபக்கர் (பண்டாரவெளி).

## இடமாற்றம்

(மன்னார்)

மன்னார் தலைமைநிலையப் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றிய திரு. மகிந்த ஹெட்டியாராச்சி கிருலப்பனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து மாவனல்லையில் கடமையாற்றிய திரு பிபசென பெரேரா மன்னார் பொலிஸ்நிலைய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மே தின விழா

(மன்னார்)

தலைமன்னார் மேற்கில் வணபிதா அலோசியஸ், திருப்பலி பூசையுடன் மேதினவிழாவை ஆரம்பித்து வைத்தார். திருப்பலிப்பூசையைத் தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் இடம்பெற்றது. தொடர்ந்து வணபிதா அலோசியஸ் புதிய விளையாட்டு மைதானத்தைத் திறந்துவைத்தார் இவ் விளையாட்டு மைதானத்திலே விவாகமானவர்களுக்கும் இளைஞர்களுக்கும் இடையில் சரபத்தாட்டப் போட்டி இடம்பெற்றது.

0 0 0

(மன்னார்)

முருங்கன் இளைஞர் முன்னேற்றக்கழகத்தினால் கொண்டாடப்பட்ட மேதின விழாவில் கூட்டணி, இ தொ கா, சுதந்திரக்கட்சி உட்பட 12 தொழிற்சங்கங்களும் கலந்து கொண்டன.

முருங்கனில் இளைஞர் முன்னேற்றக்கழகத் தலைவ ஜனாப் எம் ஏ சுல்தான் தலைமையில் 15 மைல் தூரம் வரை ஊர்வலம் இடம்பெற்றது ஊர்வலத்தில் டிராக்டர், மாட்டுவண்டிகள், சைக்கிள்கள் கலந்துகொண்டன.

ஊர்வலத்தின் பின் முருங்கன் கிறிஸ்து அரசினர் ஆலய மைதானத்தில் திரு. பி. தங்கவேலு தலைமையில் கூட்டம் நடைபெற்றது பல விளையாட்டுப் போட்டிகளும் கலை, கவியரங்கம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (நி)

# 'பால், முட்டை, இறைச்சி விலையைக்கூட்ட மாட்டோம்'

## மன்னாரில் கிராமிய கைத்தொழில் அமைச்சர் உறுதி

(மன்னார்)

''நகரப் பகுதிகளில் வசிப்பவர்கள் மட்டுமல்ல கிராமங்களில் வசிப்பவர்களும் பால், முட்டை, இறைச்சி போன்ற சத்துணவைச் சாப்பிட வேண்டும். கிராமத்தில் உள்ளவர்களே கூடுதலாக பாடுபட்டு உழைப்பவர்கள். ஆதலால் தான் இவர்களும் சத்துணவைச் சாப்பிட வேண்டும்''

இவ்வாறு தலைமன்னார் பியரில் திடீர் பால்சாலையொன்றைத் திறந்து வைத்து, பால் விற்பனையையும் ஆரம்பித்து வைத்துப் பேசிய கிராமிய கைத் தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் கூறினார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு தமிழ்நாடு சென்றிருந்த கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் இரண்டு வாரங்களைத் தமிழ் நாட்டில் கழித்துவிட்டு ராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் மார்க்கமாக தலைமன்னாரில் வந்திறங்கிய போதே இப்பால் விற்பனவு நிலையத்தை திறந்து வைத்தார். டென்மார்க் அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பால் தயாரிக்கும் இயந்திரத்தையும் அமைச்சர் இயக்கி வைத்தார்:

15 நிமிடத்தில் 36 லிட்டர் அதாவது 65 மைந்து பாலை இந்த இயந்திரத்தினால் தயாரிக்க முடியும். ஆடை நீக்கிய பால் மாவையும் வெண்ணெயும் கலந்து இந்த இயந்திரத்தில் இட்டால் 15 நிமிடத்தில் சுத்தாட்டப்பட்ட 65 மைந்து பாலைப் பெறலாம்.

இவ்வைபவத்தில் கிராமிய தொழில்துறை அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திரு. கே. எச். வீரக்கொடி, பால் சபைத் தலைவர் திரு வோல்டர் குணரட்ண ஆகியோரும் உரையாற்றினர். இணைப்புச் செயலாளர் திரு. பி திருநாவுக்கரசு உட்பட பல பிரமுகர்களும் இந்தியாவிலிருந்து வந்திருந்த பிரயாணிகளும் கலந்து கொண்டனர்.

பால் விற்பனையை அமைச்சர் திரு எஸ். தொண்டமான் ஆரம்பித்து வைத்தார். கப்பல் மார்க்கமாக வந்த உல்லாசப் பிரயாணிகளும் ஏனையோரும் பாலை வாங்கி ஆவலுடன் குடித்தனர் ஒரு கப்பால் ஒரு ரூபா வீதம் விற்பனை செய்யப் பட்டது.

இவ் வைபவத்தில் கிராமிய கைத்தொழில் அமைச்சர்திரு. எஸ். தொண்டமான் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''நான் தமிழ்நாட்டிலிருந்துவரும்போது இப்பால்சாலையைத் திறந்துவைக்கவென அமைச்சின் செயலாளரும் ஹோட்டல் கூட்டுத்தாபன நிர்வாகத்தினரும் ஏற்பாடு செய்ததைவிட்டு பெருமிதமடைகிறேன் கொழும்பு போன்ற நகரங்களில் மட்டும் இந்நிலையங்களை அமைப்பது என்ற கருத்தினை மாற்றி கிராமங்களுக்கும் இப்படி நிலையங்களை அமைத்து பின்தங்கிய மாவட்டங்களின் வசதிகளைக் கூட்டவேண்டும்

''முக்கியமாக மக்கள் கூடுதலாக வசிக்கும் இடங்களில் முதலில் திறக்கப்படும். அதற்கு எடுத்துக்காட்டாகவே இங்கு இந்த நிலையத்தைத் திறந்து வைத்திருக்கிறோம்.

### பாலின் விலை குறைவு

''தேநீரின் விலை அதிகரித்துள்ளது. ஆனால் பாலின் விலை அதிகரிக்காது. இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் பாலின் விலை குறைவாகவே உள்ளது. நான் இந்த வழியாக பலமுறை இந்தியா சென்று வந்திருக்கிறேன். இந்த இறங்குதுறையில் தரித்துச் செல்லும் பிரயாணிகள் பலர் இங்குள்ள குறைகளை எடுத்துச் சொன்னார்கள். முக்கியமாக சாப்பாட்டிற்கு உள்ள குறையையே சொன்னார்கள் அந்தக் குறையை நீக்கவே இந்த பால் விற்பனை நிலையத்தைத் திறந்துவைத்திருக்கிறோம். சாப்பாட்டிற்குக் கஷ்டம் வரும்போது 2 துண்டு பாணும் ஒரு கப் பாலும் குடித்தால் போதும். பசியும் தீர்ந்து விடும். உடலுக்கு சத்தும் கிடைத்துவிடும் அத்தோடு மலிவாகவும் கிடைக்கும்.

### மாட்டுத் தீனி விலையை குறைத்துள்ளோம்

''கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம் நல்ல இன மாடுகளை வளர்க்க வேண்டும் மாடுகளை வளர்த்துப் பால் எடுத்து உங்கள் பிள்ளைகளுக்கு கொடுங்கள், பிள்ளைகளுக்குக் கொடுத்து மிகுதியிருந்தால் எங்களிடம் தாருங்கள் அதை நாங்கள் பால் கிடைக்காத இடங்களுக்கு விநியோகிப்பாம். இப்படிச் செய்தால் நாட்டிற்கும் நன்மை. உங்களுக்கும் வருமானம் உண்டு. நீங்கள் மாடு வளர்க்கக்கூடியதாக மாட்டுத் தீனின் விலையைக் குறைத்துள்ளோம் இந்நாட்டில் எந்தப் பொருளுக்கும் விலை கூடலாம். ஆனால் மாட்டுத் தீனுக்கு மட்டும் விலை கூடவே கூடாது. ஒவ்வொரு கிராமங்களிலும் மாட்டுப் பண்ணைகளை உண்டாக்கவேண்டும் கிராமங்களில் வளர்க்கும் மாடுகள் ஒரு லிட்டர் பாலும் தருவதில்லை, நுவரெலியாவில் வளர்க்கும் மாடுகள் 15 லிட்டர் பாலைத் தருகிறது, கிராமங்களில் உள்ள மாடுகளை இன்னும் இரு வருடங்களில் 6 லிட்டர் பால் தரக்கூடியதாக மாற்றவிருக்கிறோம்.

### மது அருந்த மாட்டோம்

''கள்ளு, சாராயம் போன்ற மதுபானங்களைக் குடிப்போர் இனிமேல் பாலைக்குடியுங்கள். 'மதுவை இனி அருந்த மாட்டோம். பாலை அருந்துவோம்' என்று சபதம் எடுங்கள் பால், முட்டை, இறைச்சி இம்மூன்றும் எனது அமைச்சின் கீழ் உள்ளது. இந்நாட்டில் எந்தப் பொருளுக்கு விலை கூடினாலும் இந்த மூன்று பொருட்களுக்கும் ஒரு காலமும் விலை கூடாது. இந்த மூன்று பொருட்களின் விலையையும் குறைக்க உற்பத்தியைப்

(5ம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரில் ஜேர்மன் குடியரசு வெள்ளிவிழா!

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச்சங்கம் யாழ். கிளை நடாத்தும் பாசிசத்தை எதிர்த்து வெற்றி கொண்ட 35 வது ஆண்டு விழா. யாழ்வீரசிங்கம் மண்டபத்தில் இம் மாதம் 17ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக இலங்கையிலுள்ள ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுத் தூதவர் திரு புறுனோமே தம்பதிகள் கலந்து கொள்வார்கள்.

இலங்கை ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு நட்புறவுச்சங்க யாழ். கிளை தலைவரும், வட்டு எம். பியுமான திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மானிப்பாய் எம். பி. திரு. வி தர்மலிங்கம் மாவை சேனாதிராசா, யாழ் மேயர் திரு. இராஜா விசுவநாதன், பேராசிரியர் லஸ்லி குணசேகரா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு [illegible], திரு எஸ் தியாகராசா ஆகியோர் உரையாற்றுவார்கள். (ச)

# ஆஸ்த்மாவினால் அவதியுற்ற 50 வயது நபர் தற்கொலை!

(பாஷிட்டபுரம்)

நீண்டகாலமாகத் தொய்வ நோயினால் பீடிக்கப்பட்டிருந்தவர் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

இளவாலையைச்சேர்ந்த நமசிவாயம் இளையவன் (50 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

நீண்ட காலமாக இவர் ஆஸ்த்மா நோயினால் பீடிக்கப்பட்டு பல இடங்களில் சிகிச்சைகள் அளிக்கப்பட்ட போதும் பயன் கிடைக்காமையால் பல தடவைகள் இவர் தற்கொலை செய்யப்போவதாகக் கூறிவந்ததாகவும், சம்பவதினம் கிணற்றில் குதித்த பின்னர் பிணமாக மீட்கப்பட்டாரெனவும் விசாரணையில் தெரியவந்தது.

விசாரணை நடத்திய மரண விசாரணை அதிகாரி திரு நாகம்பிராசா இறுதியில் தற்கொலை எனத்தீர்ப்பளித்தார்

காங்கேசன்துறை பொலிசார் விசாரணைக்கான ஏற்பாட்டை செய்தனர். (அ)


# சிறந்த பஸ் நடத்துநர் சாரதி தெரிவுப் போட்டி80-

கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய நற்பண்புகளை பஸ் நடத்துநரிடமும் ஒழுக்கம், அவதானம் திறமை ஆகிய நற்பண்புகளை பஸ் சாரதிகளிடமும் வளர்க்கும் வண்ணம் யாழ் ரோட்டறிக் கழகம்

''சிறந்த நடாத்துநர், சிறந்த சாரதி''

போட்டியை

இலங்கை வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடனும் 'ஈழநாடு' பத்திரிகையுடனும் இணைந்து நடாத்த எண்ணியுள்ளது. இம்முறை வடமாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை, கிளிநொச்சி, முல்லைத்திவு, மன்னார், வவுனியா ஆகிய ஏழு டிப்போக்களையும் உள்ளடக்கிப் போட்டி நடாத்தப்படுகிறது.

இந்த டிப்போக்களிலிருந்து செயற்படும் பஸ் வண்டிகளில் கடமையாற்றும் சிறந்த சாரதிகளையும் நடாத்துநரையும் தெரிவு செய்ய உதவும் வண்ணம் 'ஈழநாடு' பத்திரிகையில் இம்மாதம் 25 ம் திகதி முதல் பிரசுரிக்கப்படும் கூப்பன்களை நிரப்பி அனுப்புமாறு யாழ் ரோட்டறிக்கழகம் பஸ் பிரயாணிகளை அன்புடன் கோருகிறது.

கீழே தரப்படும் கூப்பனைக் கத்தரித்து நிரப்பி அனுப்பவேண்டிய முகவரி:

ரோட்டேறியன் பல்வைத்தியகலாநிதி
பா. சோ. பாரதி
தலைவர் - தொழிற்சேவை பகுதி
பல் வைத்திய நிலையம்,
568 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சிறந்த பஸ் நடத்துநர்-சாரதி தெரிவுப் போட்டிக் கூப்பன்

சிறந்த நடத்துநர் பெயர் சிறந்த சாரதி பெயர்

.............................. ..............................

டிப்போ :- யாழ்ப்பாணம்-காரைநகர்-பருத்தித்துறை-கிளிநொச்சி-முல்லைத்திவு-மன்னார்-வவுனியா

(நீங்கள் தெரிவுசெய்யப்பட்டவர் கடமையாற்றும் டிப்போவின் கீழ் கீறிடுக)

பஸ் செல்லும் வழி இலக்கம் (Route No...............)

அனுப்புபவர் பெயர்...........................ஒப்பம்............

விலாசம்..............................................


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகக் கொடுமைகளைத் தீர்ப்பதுபற்றி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நிலவுகின்ற சாதிப் பிரச்சினை ஆலயப்பிரவேசம், தோட்டித் தொழில், பலியிடுதல் போன்ற சமூகக் கொடுமைகள் பற்றியும்- அவற்றின் தாக்கங்கள், தீர்ப்பதற்கான வழிமுறைகள்பற்றியுமான விரிவான அறிக்கை ஒன்றினைத் தயாரிக்கும் பணியினை அறவழிப் போராட்டக் குழு- யாழ் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டதாரி மாணவன் திரு ஞா. ஜெ. ஜெயபாலனிடம் ஒப்படைத்துள்ளது.

திரு. ஜெயபாலன் வடபகுதியின் சகல தொகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று மக்களைப் பேட்டிகண்டு, புள்ளிவிபரங்கள் சேகரித்து, முழு அறிக்கையும் தயாரிக்கவுள்ளார்.

இருமாத காலத்தில் இவ்வறிக்கையினை திரு. ஜெயபாலன் அறவழிப் போராட்டக் குழுவிடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பணியினைத் திறம்பட நிறைவேற்றுவதற்கென அறவழிப் போராட்டக்குழு நிதிவசதியினை வழங்க முன்வந்துள்ளது. இவ்வகையிலான ஆய்வு மேற்கொள்ளப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

(கொ)

பரீட்சையில் தோல்வி!

# ஆசிரியருக்குப் பயந்து மாணவி தற்கொலை

(பண்டத்தரிப்பு)

பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவி ஒருவர் கடந்த ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் தாம் சித்தியடையத் தவறியமைக்காக வகுப்பு ஆசிரியர் தம்மைக் கண்டிப்பார் என்று பயந்து கிருமிநாசினி அருந்தித் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட பரிதாப சம்பவம் சங்கானை பொலிஸ் பகுதியிலுள்ள தொட்டிலடி என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது.

சதாசிவம் நிலாவதி (18 வயது) என்ற பிரஸ்தாப மாணவியின் மரண விசாரணை பண்டத்தரிப்புப்பிரிவு திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர் அல்போன்சஸ் அந்தனிப்பிள்ளையார் முன்னிலையில் நடைபெற்றது. அத்தருணம் காலஞ்சென்றவரின் தம்பியான இராசரத்தினம் (13 வயது) சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது.

"காலஞ்சென்ற எனது அக்கா இம்முறை நடைபெற்ற பரீட்சையில் சித்தியடையத் தவறிவிட்டார். இதற்காகத் தம்மை வகுப்பு ஆசிரியர் கண்டிப்பார் என்றும் பாடசாலைக்குப் போவதற்குத் தமக்கு விருப்பமில்லை என்றும் சில நாட்களாகச் சொல்லிவந்தார். சம்பவதினம் அம்மாவின் வற்புறுத்தலின்பேரில் பாடசாலைக்குப் போவதற்கு என்னுடன் வந்தார். இடைவழியில், 'பரீட்சையில் சித்தியடையாமல் அங்கு வருவதற்குப் பயமாக இருக்கிறது; நான் வீட்டுக்குப் போகப்போகிறேன்' என்று கூறிவிட்டு, வீட்டிற்குத் திரும்பிச் சென்றார். நான் தனியாகப் பாடசாலைக்குப் போய்விட்டேன். பின்பு பாடசாலையிலிருந்து திரும்பி வந்தபோது அக்கா வீட்டில் காணப்படாததால் எல்லா இடமும் தேடிப் பார்த்தோம். கடைசியில் வீட்டிற்குப் பின்புறத்திலுள்ள கொட்டில் ஒன்றில் இறந்து கிடக்கக் கண்டோம். காலஞ்சென்றவரின் பெரியதாயார் நா. இராசலட்சுமி என்பவரும் சாட்சியமளித்தார்.

காலஞ்சென்றவர் அருந்திய தாகக் கருதப்படும் கிருமிநாசினி வெற்றுப் போத்தலும் மரண விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்டது. காலஞ்சென்ற மாணவியின் உடலில் இருந்த சிறுகாயங்கள் கிருமிநாசினி அருந்திய பின்னர் மாணவிக்கு ஏற்பட்ட அவஸ்தையின் காரணமாக நிலத்தில் விழுந்து உருண்டபோது ஏற்பட்டிருக்கலாம் என்றுதாம் கருதுவதாக மரண விசாரணை அதிகாரி தெரிவித்துத் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினார். சாட்சிகளை சங்கானைப் பொலிசார் ஆஜர் செய்தார்.

(அ)

# யாழ் நகரில் வள்ளுவர் சிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் நடாத்தும் வள்ளுவர் விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம்மாதம் 24ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன், உலகதமிழாராய்ச்சி மன்ற ஸ்தாபகர் அருட்திரு தனிநாயக அடிகளார், யாழ். பல்கலைக்கழக தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி ஆகியோர் உரைநிகழ்த்துவார்கள்.

பொன்சுந்தரலிங்கம் திருக்குறள் இசை நிகழ்த்துவார். திருமதி யோகேந்திரா துரைசுவாமி பரிசில் வழங்குவார்.

[க]

# "நகரசுத்தி தொழிலாளருக்கு வீடுகள் வழங்கப்படும்"

## யாழ். மேயர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வீடற்ற யாழ். நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வெகு விரைவில் வீடுகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். நகரசுத்தித் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் பேசிய யாழ். மாநகர முதல்வர் திரு. ராஜா விசுவநாதன் கூறினார்.

குருநகர் இராஜசிங்கம் வீதியில் திரு. ஆ. பர்ஞாந்து தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு விசுவநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நகரசுத்தித் தொழிலாளர்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள். குடியிருக்க வீடு இல்லை. குடிநீர் வசதியில்லை. அவர்கள் வாழும் இடங்களில் மின்சாரவசதிகூட இல்லை. அவர்களின் கஷ்டத்தை உணர்ந்து நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு ஒரு வீட்டுத்திட்டம் வேண்டுமெனப் போராடினேன். எமது போராட்டம் வெகுவிரைவில் வெற்றியளிக்கும் என உறுதியளிக்கிறேன்.

நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வேண்டிய குடிநீர் வசதியையும் மின்சார வசதியையும் உடனடியாகச்செய்து தருவதற்கு ஆகவேண்டிய முயற்சிகளை வெகுவிரைவில் மேற்கொள்ளுவேன்.

நகரசுத்தித் தொழிலாளர்கள் தங்களது கடமைகளை சரிவரச் செய்து பொதுமக்களின் அன்பைப் பெறவேண்டும். உங்களின் தொழிலினால் தான் இந்த நாடே சிறக்கவேண்டும். அத்தகைய தொழிலாளர்களின் ஒரு நாள் இதுவரை தீர்க்கப்படாதது கவலைக்குரியது.

யாழ் மாநகரசபை உறுப்பினரும் நகரசுத்தித் தொழிலாளர் சங்கப் பிரதிநிதியுமான திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது:- "நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்கள். அவர்கள் நலன்களைக் கவனிக்க வேண்டியது மாநகரசபையின் பொறுப்பு. நகரசுத்தித்தொழிலாளர்களின் நலன்களைப்பாதுகாக்கவேண்டிய மாநகரசபை அவர்கள் பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்க முற்பட்டால் நாம் முன்நின்று போராட்டத்தை நடத்துவதற்குத் தயங்கமாட்டோம். தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கைகளிலொன்றான வீட்டுத்திட்டத்திற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க எப்போதும் தயாராக இருக்கிறோம். எமது சங்கம் கூட்டணித் தொழிற் சங்கங்களுடன் ஒன்றிணைய எடுத்த தீர்மானம் பாராட்டிற்குரியது. சுமார் 35 வருடங்களுக்கு முன் இந்த இடத்தில் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி நாம நடத்திய போராட்டங்களை இக்கூட்டத்தில் நினைவுகூரத்தக்கது".

உபமுதல்வர் திரு. சேவியர் பேசுகையில் "நகரசுத்தித் தொழிலாளர்களின் மத்தியில் நான் நடமாடும் ஒருவன். அதே சமயம் அவர்களுடைய கஷ்டங்களை நான் நன்கு அறிவேன். இத்தொழிலாளர்களுக்கு சட்டப்படி கொடுக்கவேண்டிய உரிமைகளை எனது பதவிக்காலத்தில் நிறைவேற்றப் பின்நிற்கமாட்டேன்" என்றார்.

என். ரி. செல்லத்துரை பேசுகையில் "நகரசுத்தித் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்காக நாம் பாடுபடுவதுடன் எந்தப் பிரச்சினையையும் தொழிலாளர் என்னிடம் வந்து முறையிட்டால் நாம் நேரில் சென்று தீர்க்க நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீட்டுத்திட்டம் மாநகரசபை அமைத்துக் கொடுக்கவேண்டும், மின்சார வசதி செய்ய வேண்டுமெனவும் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமெனவும், மலகூடம் கட்டித்தரவேண்டுமெனவும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(கொ)

# முதலாளியின் சைக்கிளை மோசடி செய்தாராம்

## தொழிலாளி றிமாண்டில்

(மாவிட்டபுரம்)

தமது முதலாளியின் சைக்கிளை ஒளித்து வைத்துவிட்டுக் காணவில்லையெனக் கூறினாராம் தொழிலாளி ஒருவர். சைக்கிளுடன் கைதான அந்நபர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்கப்பட்டார்.

தெல்லிப்பழை அம்பனையைச் சேர்ந்த சலூன் ஒன்றில் உதவியாளராகப் பணிபுரியும் முல்லைத்தீவைச் சேர்ந்த ஆ. டிக்விராஜா என்ற இளைஞர் சலூன் முதலாளியின் சைக்கிளை பாவித்து வந்தாராம். ஒரு நாள் சைக்கிளில் வெளியே சென்றவர் சைக்கிள் திருட்டுப்போய் விட்டதாகக் கூறவே இது குறித்துக் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

பின்னர் மேற்படி இளைஞர் இந்த சைக்கிளை இரகசியமான முறையில தமது முதலாளிக்குத் தெரியாமல் உபயோகித்துவந்ததை தடுத்து பொலிஸாருக்குத் தகவல் அறிவிக்கப்பட்டபோது பொலி

(8-ம் பக்கம் பார்க்க.

பொலிஸ் கான்ஸ்டபிளைத் தாக்கிய

# கோஷ்டி பலவந்தமாக சிகிச்சை அளித்ததாம்

(மாவிட்டபுரம்)

பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தாக்கிய கோஷ்டியொன்று அவரைப் பலவந்தமாக காரில் ஏற்றிச் சென்று தனியார் வைத்தியசாலையில் சிகிச்சையளித்தார்களாம். அவர்களிடமிருந்து தப்பி பொலிஸ் நிலையத்தில் மேற்படி பொலிஸ் கான்ஸ்டபிள் செய்து கொண்ட முறைப்பாட்டின் பேரில் மூவர் கைதாகி றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமை புரிபவருமான செல்லையா இராஜரட்னம் என்னும் பொலிஸ் கான்ஸ்டபிளே இத்தாக்குதலுக்குள்ளானவராவார்.

குரும்பசிட்டியில் வைத்து இவருக்கும் கோஷ்டி ஒன்றுக்குமிடையில் சிறு பிரச்சினை ஏற்பட்டுப் பின்னர் அக்கோஷ்டியால் நையப்புடைக்கப்பட்டதாகவும் பின்னர் பலவந்தமாக காரில் ஏற்றித் தெல்லிப்பழைக்குக் கொண்டு சென்று தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சையளித்ததாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

இவர்களிடமிருந்து நழுவிய பொலிஸ் கான்ஸ்டபிள் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்து கொண்டதையடுத்து சுன்னாகம் பொலிசார் இது பற்றிக் காங்கேசன்துறை பொலிசாருக்கு அறிவித்தனர்.

காங்கேசன்துறைப் பொலிசார் இதுகுறித்து விசாரணை மேற்கொண்டு சினித்தம்பி மகேஸ்வரன் என்பவரை இது தொடர்பாகக் கைது செய்தனர். மற்றும் சினித்தம்பி ஈஸ்வரன், சண்முகம், ஆனந்தசிங்கம் ஆகியோர் பொலிசாரிடம் சரண் புகுந்தனர்.

இவர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது கைதானவர் இம்மாதம் 21ம் திகதி வரையும் மற்றவர்கள் 19ம் திகதி வரையும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

# மரணத்தில் ஏற்பட்ட சந்தேகம்

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமான பெண்மணியொருவரின் மரணத்தில் எழுந்த சந்தேகம் காரணமாக பிரேத பரிசோதனை செய்யப்பட்டு இறுதியில் இயற்கை மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

சோப்பாய் சிறுப்பிட்டியைச் சேர்ந்த விசுவர் நல்லம்மா [30 வயது] என்னும் பெண்மணி தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானதையடுத்து இவரை பரிசோதித்த வைத்திய அதிகாரி செல்வி ஸ்ரீ கௌரி துரைராஜா இம்மரணத்திற்கான காரணம் என்னவென்று கூறமுடியாதிருப்பதாகக் கூறினார்.

இதனையடுத்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு நா. தம்பிராசா பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேதபரிசோதனையின் நோய் காரணமாக ஏற்பட்ட இயற்கை மரணம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

# அண்ணன் அடித்தாராம் தம்பி தற்கொலை!

மாவிட்டபுரம்)

தமது சொல்லைத் தட்டிய தம்பிமீது அண்ணன் தமது கைவரிசையைக் காட்டியதால் மனமுடைந்த தம்பி கிருமிநாசினியருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

மயிலிட்டியைச் சேர்ந்த நன்னித்தம்பி விக்னேஸ்வரமூர்த்தி என்னும் 16 வயது பள்ளி மாணவனே இந்த முடிவுக்குள்ளானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்திய சமயம் காலமானவர் க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இம்முறை தோற்றி சித்தயடையத் தவறியதால் மனமுடைந்த நிலையில் வீட்டில் வேலை எதுவும் செய்யாமல் சும்மா இருந்துவந்ததாகவும் சம்பவ தினம் காலமானவரின் அண்ணன் இவரைத் தோட்டத்திலிருந்து வெங்காயம் எடுத்துவருமாறு கூறியதாகவும் இவர் அதற்கு மறுக்கவே அவர் இவரை அடித்ததாகவும் அதனையடுத்து இவர் தோட்டத்திலிருந்த நஞ்சை எடுத்து அருந்தியதாகவும் சாட்சியங்களிலிருந்து தெரியவந்தது.

இறுதியில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை பொலிசார் விசாரணைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

# அச்சுவேலி யூ. என். பி. கிளை தீர்மானம்

(தெல்லியடி)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள பாடசாலைகளின் குறைபாடுகளை, கல்வி அமைச்சர் திரு ரனில் விக்கிரமசிங்காவிற்கு நேரடியாகக் காண்பிக்க, அச்சுவேலி ஐக்கிய தேசியக் கட்சிக் கிளை தீர்மானித்துள்ளது.

வடபகுதிக்கு அமைச்சர் வருகை தரும் போது, அவரை அச்சுவேலிக்கு அழைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது என கிளைத் தலைவர் திரு. ஏ. எஸ். வஸ்தியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குமாறு அச்சமயம் இக்கிளை கோரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

(க)

# பால், முட்டை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருக்க வேண்டும். ஏனையவர்களும் இம்மூன்று வகை உணவையும் சாப்பிட வேண்டும். நாமும் இம் மூன்று பொருட்களையும் உற்பத்தி செய்கிறோம். நீங்களும் ஏராளமாக உற்பத்தி செய்தால் நாட்டிற்குப் நன்மை உங்களுக்கும் நல்ல வருவாய் கிடைக்கும்." என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய்மையான மாநில அரசை அமைப்பது தமிழக மக்கள் கடமை

## ராஜ்நாராயண் கட்சி வானொலியில் உரை

சென்னை, மே 14

"இது ஒரு மகத்தான பொதுத் தேர்தல். இந்திய ஜனநாயக அமைப்பு உலகிலேயே பெருமை பெற்றது. தமிழகம் இந்திய மண்ணின் ஒருபகுதி. தமிழக மக்கள் சுதந்திரத்திற்கு பெருமளவு தியாகம் செய்துள்ளார்கள். இந்திய ஒற்றுமையே எமது குறிக்கோள். "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" கோஷம் கேட்பதற்கு இனிமையானது. தூய்மையான மாநில அரசே மத்திய அரசிற்கு கொள்கையை வகுத்துக் காட்டிக்க முடியும். எனவே அத்தகைய ஒரு மாநில அரசை தேர்ந்தெடுப்பது தமிழக மக்களின் கடமையாகும்."

மேற்கண்டவாறு ராஜ்நாராயண் தலைமையிலான ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக் கிளைத் தலைவர் திரு. வி. சுப்பிரமணியன் இந்திய வானொலியில் ஆற்றிய தேர்தல் பிரசார உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: ஜனநாயகம் காக்கப்பட வேண்டுமானால் வலுவான கட்சியொன்று தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரவேண்டும். தேசியசக்தி வலுப்பட வாக்காளர் சிந்தித்து செயல்பட வேண்டும். இந்த தேர்தல் ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தும். நமது மாநிலத்தில் கிராமவாசிகள் பெருமளவில் வாழ்கிறார்கள். கனிவளம், மண்வளம், மனவளம் ஆகிய வற்றில் இந்தியா உலகில் முன்னணியில் திகழ்கின்றது. கிராமப் பொருளாதார வளர்ச்சி கடந்த 5 ஆண்டு களாக இந்தியாவில் முன்னேற்றமடையவில்லை. ஜனப்பெருக்கம் இன்று முக்கிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. குடும்பக்கட்டுப்பாட்டில் மக்கள் தீவிரமாக அக்கறை கைக்கொள்ள வேண்டும். நிலத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதின் மூலம் விவசாயத்தைப் பெருக்கமுடியும்.

கைத்தொழிலில் உள்ளூர் தொழிலாளர்களுக்கு வாய்ப்பளிக்கவேண்டும். விவசாயத்திற்கு காவிரி, பவானி போன்ற நதிகளை சிறந்தமுறையில் பயன்படுத்தவேண்டும். மக்கள் சுகாதாரம் பாதுகாக்கப்படவேண்டும். கைத்தொழில் மீது தனி போட்டி தவிர்க்கப்படவேண்டும். இப் பிடிக்காத விதிகள் கட்டப்படவேண்டும். கல்விமுறை சீரமைக்கப்படவேண்டும். தீண்டாமை, வரதட்சணை முறை ஒழிக்கப்படவேண்டும். இக் குற்றங்களைப் புரிவோருக்கு கடுமையான தண்டனை வழங்கவேண்டும். பதினாறு வயதுவரை கட்டாயக்கல்வி முறை அமுல்நடத்தப்பட வேண்டும். விபச்சாரம் ஒழிக்கப்படவேண்டும். ஆபாச திரைப்படங்கள், சஞ்சிகைகள் தடைசெய்யப்படவேண்டும்.

தொழிலாளர்களுக்கு லாபத்தில் ஒரு பங்கு போனஸாக வழங்கவேண்டும்.

தமிழகத்தின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும், பதவிகளை சொந்த நன்மைக்கு உபயோகிக்காத சுயநலமில்லாதவர்களை தமிழக மக்கள் தங்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். இத்தகைய திறமையான வேட்பாளர்களை "ராஜ்நாராயண் கட்சி" நிறுத்தியுள்ளதென்றும், அவர்களை தேர்ந்தெடுப்பது தமிழக மக்களின் கடமையென்றும் திரு சுப்பிரமணியன் தனது உரையின் இறுதியில் குறிப்பிட்டார். [வெ]

# அமெரிக்கா மீட்புமுயற்சி; தோல்வியுற்றது எப்படி?

கடந்த ஆறுமாதங்களுக்கு மேலாக ஈரானில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க அதிகாரிகள் பிரச்சினை இன்று சர்வதேச நெருக்கடியையே தோற்றுவிக்கும் நிலையை உருவாக்கி வருகின்றன.

அண்மையில் இப்பணயக் கைதிகளை விடுவிக்க அமெரிக்கா மேற்கொண்ட ராணுவ நடவடிக்கை தோல்வியடைந்தது சர்வதேசரீதியில் பலத்த விமர்சனத்திற்குள்ளானது.

இத்திடீர்முயற்சி குறித்து தினம்தினம் பல புதிய செய்திகள் வெளியாகிக் கொண்டே இருக்கின்றன.

அமெரிக்கா முன் யோசனையின்றி மேற்கொண்ட இந்நடவடிக்கை பெரும் தோல்வியையே அமெரிக்காவிற்கு ஏற்படுத்தி விட்டது என்று சிலர் விமர்சித்திருப்பதற்கு அண்மையில் வெளியான செய்தி ஒன்று ஆப்பு வைத்து விட்டது.

அமெரிக்காவின் இம்மீட்பு முயற்சி திடீர் நடவடிக்கை யல்ல ஒரு மாதத்திற்கு முன்னரே திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதே அச் செய்தியாகும்.

அமெரிக்க விமானங்கள் ஈரானில் இறங்குவதற்கு ஏற்ற இடம் ஒன்றைத் தெரிவு செய்வதற்காகவும் விமானம் இறங்கிய குறிப்பிட்ட பாலைவனத்தில் விமானம் இறங்குவதற்கு ஏற்ற மணல்வளம் உண்டா என்பதை ஆராய்வதற்காகவும் அமெரிக்க அதிகாரிகள் குழு ஒருமாதத்திற்கு முன்னரே இரகசியமாக ஈரான் சென்றிருந்தது.

அங்கு ஆய்வு நடத்தியவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்த கால நிலை தொடர்பான குறிப்புகள் தவறானதாக இருந்தமையே இம்முயற்சி தோல்வியில் முடிந்ததற்கு முக்கிய காரணமாகும்.

பாரசீகக்குடாவில் தரித்து நிற்கும் அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல்களிலிருந்து ஹெலிகொப்டர்கள் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே அங்கு காலநிலை சீரற்று இருந்ததாகவும் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டபடி காலநிலை இல்லாததனாலேயே விமானங்கள் விபத்துக்குள்ளானது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் இத்திட்ட மீட்பு தாக்குதல் முயற்சி ஆகாயத்தில் கொண்டு அவதானிக்கின்றபோது மீண்டும் இவ்வாறான தாக்குதல் நடைபெறாது என்று உறுதியாகக் கூறமுடியாதல்லவா.

# 99 போலி மோட்டார்கார் லைசென்ஸ் வழங்கிறாராம்

## 23 வயது இளைஞருக்கு றிமாண்ட்

(கண்டி)

சுமார் 99 போலி கார் சாரதிய லைசென்ஸ்களை வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 23 வயது இளைஞர் ஒருவர் கட்டுக்கஸ்தோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டு கண்டி மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் போன்று கையொப்பமிட்டு சுமார் 99 லைசென்ஸ்களை வழங்கி ஒவ்வொன்றுக்கும் தலா 500 ரூபா விதம் வசூலித்ததாக இந்த இளைஞர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நாரஹென்பிட்டியிலுள்ள மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து 99 லைசென்ஸ்களைத் திருடியதாக இந்நபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

லைசென்ஸுக்கு விண்ணப்பித்தவர்கள் நாரஹென்பிட்டியிலுள்ள திணைக்களத்திற்கு லைசென்ஸ்களைப் பெறவரும்போது அவர்களிடமிருந்து புகைப்படங்களைப் பெற்று லைசென்ஸில் உரிய இடத்தில் ஒட்டி, திகதி முத்திரையிட்டு, ஆணையாளரின் கையொப்பம் போன்று கையெழுத்திட்டு லைசென்ஸ்களை இந்நபர் வழங்கி வந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இம்மாதம் 19ம் திகதிவரை இந்நபர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (இ)

# அஸாம் நெருக்கடிகளுக்கு எதிர்க்கட்சிகளே காரணம்

## இந்திரா குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 14

அஸாம் நெருக்கடி கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன்னரே தோன்றிவிட்டது. நான்கு மாதங்களுக்கு முன்னர் பதவியேற்ற எமது அரசுதான் இந்த நெருக்கடிக்குக் காரணம் என்று குற்றம்சாட்டுவதில் அர்த்தமில்லை.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

அஸாம் பிரச்சினையை உருவாக்கியவர்கள் இன்றைய எதிர்க்கட்சியினரே என்றும் கூறிய திருமதி காந்தி மேலும் கூறியதாவது;

நாட்டின் அபிவிருத்திக்கு வலுவான மத்திய அரசு அவசியம். மாநில அரசுகளுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று கேட்பதில் அர்த்தமில்லை. ஏனெனில் மாநிலங்களுக்கு ஏற்கனவே போதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் மத்திய அரசு என்றுமே தலையிடாது.

திமுக — இந்திராகாங்கிரஸ் கூட்டணி அமைக்கப்பட்டது தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அல்ல; நல்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்தவே இக் கூட்டணி அமைக்கப்பட்டது. (இ)

# உகண்டாவில் டிசம்பரில் தேர்தல்

# அதுவரை ஆணைக்குழு ஆட்சி நடத்தும்

## புதிய ஆட்சிபீடம் அறிவிப்பு

கம்பாலா, மே 14

உகண்டாவில் இவ்வாண்டு டிசம்பரில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும் அதுவரை தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்ந்து ஆட்சி நடத்தும் என்றும் புதிய ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

என்டபேயில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி திரு. கொட்பிரேபினை மீது ஊழல், அதிகாரதுஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இக்குற்றச்சாட்டுக்கள் பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்யும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உகண்டாவில் கடந்தவாரம் தோன்றிய அரசியல் நெருக்கடியை அடுத்து திரு. பினைசாவின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டு மந்திரிசபையும் கலைக்கப்பட்டதும் தற்போது இராணுவத்தின் உதவியுடன் ஜனாதிபதி ஆணைக்குழு ஆட்சி நடத்தி வருவதும் தெரிந்ததே. (இ)

# பிரிட்டிஷ் ரயில் சேவையின் 150-வது ஆண்டு பூர்த்திவிழா

லண்டன், மே 14

பிரிட்டிஷ் ரயில்சேவையின் 150 ஆண்டுப் பூர்த்திவிழா இம்மாதம் பிரித்தானியாவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பிரிட்டிஷ் ரயில்சேவையின் 150 ஆண்டுகள் பூர்த்தியை வைபவ ரீதியாகக் கொண்டாடும் விசேட நிகழ்ச்சிகள் இம்மாதம் 24, 25, 26ம் திகதி நடைபெறுகிறது.

இவ்வைபவங்களில் கலந்துகொள்ள ஜப்பான், முதலிய நாடுகளைச் சேர்ந்த ரயில்வே ஊழியர்கள் பிரிட்டனுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டனில் 1830ம் ஆண்டு முதன்முதலில் லிவர்பூலிலிருந்து மான்செஸ்டருக்கு ரயில்சேவை விடப்பட்டது.

## வடக்கில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் காலத்திற்குக்காலம் இப்பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்ததன்காரணமாகவும் உள்ளீடுகளின் விலை அதிகரிப்பினாலும், உற்பத்தியாளருக்குப் பொருட்களை விற்பனை செய்வதில் நம்பிக்கை இன்மையாலும் ஏற்பட்ட உற்பத்திச் செலவினங்களின் அதிகரிப்பும் விவசாயிகளின் உற்பத்தி உற்சாகத்தை குறைவடையச் செய்ததுடன் மிளகாய்ச் செய்கையின் அளவையும் வெகுவாகக் குறைவடையச் செய்துள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைவிழுந்தான், வவுனிக்குளம், அம்பலப்பெருமாள்குளம், கல்விளான்குளம், தென்னியன்குளம், கோட்டைகட்டினகுளம், முருகண்டிக்குளம் ஆகிய ஆறு பெருங்குளங்களையும், 5000 ஏக்கருக்கும் கூடுதலாகக் காணிக்கு நீர்ப்பாசன வசதியளிக்கும் பல சிறுகுளங்களையும் கொண்ட துணுக்காய் சமநலச்சேவை நிலையப் பரப்பை உள்ளடக்கிய துணுக்காய் உதவி அரசாங்கஅதிபர் பிரிவை யாழ் மாவட்டம் இழந்தபோதும் ஏனையபயிர்களின் விளைச்சல் பொதுவாகத் திருப்தியாக இருந்ததெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 53 லட்சம் புதிய வாக்காளர்

புதுடில்லி, மே 14

இம்மாத இறுதியில் 9 இந்திய மாநில சட்டசபைகளுக்கும் நடைபெற இருக்கும் தேர்தலில் 53 லட்சம் புதிய வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் என தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது. (இ)

## மாதர்கமிட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலியின் ஆதரவால் வடக்கு 21-ம் கிளை மாதர் கமிட்டியின் அங்குரார்ப்பணக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. மூ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி ச. அருளு செயலாளர் சி. தங்கம்மா பொருளாளர் அ. மனோன்மணி.

செயற்குழு உறுப்பினர்களாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு 50 சதம் The EELANAADU

## அண்ணாமலை பல்கலைக்கழகம் மூடப்பட்டது

சென்னை, மே 14 இரண்டு வகுப்பு மாணவர்களுக்கிடையே இடம்பெற்ற மோதலையடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. இதேபோன்று ஒருமாதத்திற்குமுன்னரும் மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (கு)

## பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் மட்டுநகர்கிளை

(மட்டக்களப்பு)

பிராந்திய அபிவிருத்தி அமைச்சு தன் அபிவிருத்தி வேலைகளை துரிதமாய் மேற்பார்வை செய்யும்பொருட்டு மட்டக்களப்பில் தனது முதலாவது கிளையை இம்மாத இறுப் பகுதியில் திறப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகிறது.

இக்அலுவலகம் காலஞ்சென்ற மாவட்ட மந்திரி திரு. எம். கனகரத்தினத்தின்கல்லடி விடுதியில் அமைக்கப்படவுள்ளது.

இவ்அமைச்சின் அலுவலகங்கள் ஏனைய மாவட்டங்களான மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை திருகோணமலை ஆகிய இடங்களிலும் திறக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மட்டுநகர் பாடசாலை தற்காலிக கொட்டில்களின்

# ஓலைக் கூரைகள் சேதமடைந்ததால் கல்வி பயிலும் மாணவர்கள் அவதி!

## வெய்யிலின் பாதிப்பால் முன்கூட்டியே மூடப்படுகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சூறுவளியால் பாடசாலைக் கட்டிடங்கள் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக அமைக்கப்பட்ட ஓலைக்கொட்டில்கள் சேதமடைந்ததைத் தொடர்ந்து தற்போதுமாணவர்கள் கடும்வெய்யிலில் இருந்து பாடங்களைக் கற்று வருகின்றனர்.

இக்கொட்டில்களாவும் தற்காலிக கொட்டில்களாக புயலில் சரிந்துவிழுந்த தென்னங் குற்றிகளால் அமைக்கப்பட்டன. தென்னங்குற்றிகள் உக்கி உலுத்துப்போனமையினால் தற்போது கொட்டில்கள் சரிந்துநிலையில் காணப்படுகின்றன. சில பாடசாலைகளின் கூரைகளில் ஓலைகளே இல்லை. இதனால் பாடசாலைகளின் கொட்டில் வெயிலில் நடைபெறுகின்றன. வெயில் அதிகரிக்கும் போது சில பாடசாலைகள் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்புமூடப்படுகின்றன.

இக்கொட்டில்கள்யாவும் அமைக்கப்பட்டு ஒன்றரை வருடங்களாகின்றது. புதிய தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்குக் கூட நிதி இதுவரை வழங்கப்படவில்லை.

இதுசம்பந்தமாய் கல்வி இலாகாவுடன் தொடர்பு கொண்டபோது புதிய தற்காலிக கொட்டில்கள் அமைப்பதற்கான இரண்டாம் கட்ட நிதி விரைவில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தனர். (கு)

### தர்மருக்கு கடும்காய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ள மானிப்பாய்த் தொகுதிப் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கத்தைப் பூரணஓய்வு எடுக்குமாறு அவரது டாக்டர்கள் கூறியிருக்கின்றனர். திரு தர்மலிங்கத்தின் உடல்நிலையில் இப்போது சிறிய அபிவிருத்தி ஏற்பட்டுள்ளபோதிலும் காய்ச்சல் பூரணமாக இன்னும் விடவில்லை.

### தமிழக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை தமிழக அரசு ஏற்றுக்கொண்டிருந்ததுடன், மிகுதி ஏழு கோரிக்கைகளையும் சில வாரங்களில் அமைக்கப்படவுள்ள புதிய அரசின் முடிவுக்கே விடுவதாக அறிவித்திருந்தது.

[illegible] விஜயம் செய்த இந்திய பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் தமிழக [illegible] முடிவை ஏற்றுக்கொண்டு வழியாக வேலைநிறுத்தத்தை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார்.

### எம். ஜி. ஆர். வேண்டுகோள்

இதேவேளை முன்னாள் தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இரண்டு வாரங்களில் நடைபெறவுள்ள தேர்தலின் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படும் புதிய அரசு உங்கள் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கும் ஆதலால் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு தேர்தல் அமைதியாக நடக்க ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். (கு)

### முதலாளியின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] வந்து [illegible] இவரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது இவர் றிமாண்டில் வைக்கப்பட்டார். (கு)

### ஈச்சமோட்டையில் கைப்பற்றப்பட்ட

## 40 கட்டு பீடிப் புகையிலைக்கு ஒருலட்சம் ரூபா தண்டம்!

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டையில் ஒரு வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட நாற்பது கட்டு பீடிப்புகையிலையும் ஒரு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுத் திருப்பி அதற்குரியவரிடம் ஒப்படைப்பதற்கு வடபகுதி சுங்க உதவிக் கலக்டர் திரு. எஸ். என். ஜே. சேனரத்ன உத்தரவிட்டார்.

பீடிப்புகையிலை கண்டெடுக்கப்பட்ட வீட்டுச் சொந்தக்காரருக்கு இரண்டாயிரம் ரூபாயும் புகையிலைச் சொந்தக்காரருக்கு ஐயாயிரம் ரூபாயும் அபராதம் விதிக்கப்பட்டது.

இந்தக் கடத்தல் பீடிப் புகையிலையை காங்கேசன் துறைச் சுங்கப்பகுதியைச் சேர்ந்த திரு. கே. கந்தசாமி தலைமையில் சென்ற சுங்கப் பகுதியினர் கைப்பற்றினர்.

## பிரதிமந்திரி பங்குபற்றும் யாழ். இளைஞர் வாரவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இளைஞர் சேவை மன்றம் நடாத்தும் இளைஞர் வாரம் இம்மாதம் 19ஆந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து ஆறு நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியின்போது இளைஞர் விவகார வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் திரு காமினி அத்துக்கோறள சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவின் முதலாம்நாள் நிகழ்ச்சியை யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் ஆரம்பித்துவைப்பார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியின்போது யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி பிரதமவிருந்தினராகக்கலந்துகொள்வார்.

மூன்றும், நான்காம், ஐந்தாம்நாள் நிகழ்ச்சிகளின்போது முறையே வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு.ரி மாணிக்கவாசகர், வடபிராந்தியப் பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாக கலந்துகொள்வார்கள்.

ஆறும்நாள் நிகழ்ச்சியின் போது இளைஞர் விவகார வேலைவாய்ப்புப் பிரதி அமைச்சர் திரு. காமினி அத்துக்கோறளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (கொ-கு)

### சாட்சிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரகு, த ஜீவராசா மகேந்திரன், ச பிரான்சிஸ் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பொலிசாரினால் கைதுசெய்யப்படாது தலைமறைவாகி இருந்துவரும் மூன்றும் சந்தேக நபரான ச பிரான்சிஸ் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி வி என் நவரத்தினம், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர் [illegible] ஆஜரானர்கள். அரச சார்பில் அரசசட்டத்தரணி பி. அரவிந்தன் ஆஜரானார். (க-கு)

### மாணவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென்று கோரி வரும் மாணவர்கள் நகரில் ஆங்காங்கே வன்செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

தென்கொரிய சோல் நகரின் நகரமண்டபத்தில் கூடிய 50 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது அவர்களைக் கலைப்பதற்கு பொலிசார் குறுந்தடிப் பிரயோகம் செய்தனர். இதனையடுத்தே பொலிசாருக்கும் மாணவர்களுக்குமிடையே சண்டை மூண்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே ஆயுதப்படையினர் பொலிசாருக்கு உதவினர்.

தற்போது பிரதமர், ஜனாதிபதி ஆகியோரின் இல்லங்களுக்கு பலத்த காவல்செய்யப்பட்டுள்ளதுடன் நகரின் பிரதான இடங்களில் கவசத் தொப்பியணிந்த ஆயுதப்படையினர் காவல்புரிந்துவருகின்றனர். (கு)

### தலைமறைவான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளை தொடர்பாக ஏற்கனவே இருவர் கைது செய்யப்பட்டு ஒருவர் பிணையில் விடப்பட்டதுடன் மற்றவர் றிமாண்டிலும் வைக்கப்பட்டுள்ளார்.

இக்கொள்ளை தொடர்பாக ராஜ்குமாரைக் கைது செய்த பொலிசார் இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவிலும் தேடுதல் நடத்தியபோதும் அவர் கடந்த மூன்று வருடங்களாக தலைமறைவாகத் திரிந்தார்.

இச்சந்தேக நபர் நேற்று முன்தினம் தனது தாயரான திருமதி யோகம்மா மூலம் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கணேசலிங்கத்திடம் சரணடைந்தார்.

ராஜ்குமார் சரணடைந்ததை அடுத்து பொலிசார் நடத்திய விசாரணையில் கடந்த மூன்று வருடங்களாக சந்தேக நபர் இந்தியாவில் தலைமறைவாகஇருந்துவிட்டு அண்மையில் இலங்கைதிரும்பினார் என்பதும், இவர் ஒரு பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த பலர் பொலிசில் சரணடைந்துவருவதை அடுத்து பயங்கரவாதம் பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகப் பொலிசார் நம்பிக்கை தெரிவித்தனர்.

ராஜ்குமார் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (கொ-சு)

## கார்ட்டர் வெற்றி

வாஷிங்டன், மே 14

அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டர் இரண்டாவது தடவையாக மீண்டும் ஜனாதிபதியாகும் வாய்ப்புகள் அதிகரித்துவருகின்றன.

ஜனாதிபதி தேர்தலுக்கான ஜனநாயகக்கட்சி வேட்பாளர் தேர்தலில் மெரிலண்ட், நெப்ராஸ் மாநிலங்களிலும் ஜிம்மி கார்ட்டர் வெற்றிபெற்றுள்ளார்.

இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் 6 மாநிலங்களில் திரு. கார்ட்டர் வெற்றி பெற்றார் ஒருமாநிலத்தில் மட்டுமே செனட்டர் எட்வேட் கெனடி வெற்றிபெற்றார். (கு)

### சைக்கிள் திருட்டு:

(யாழ்ப்பாணம்)

யாழ். நக்காவில்வீதியைச் சேர்ந்த தனபால என்பவர் தமது சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளதாக யாழ், பொலிசில் புகார்செய்ததைத் தொடர்ந்து புலன்விசாரணையில் ஈடுபட்ட உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திசநாயக்கா தலைமையிலான பொலிசார் குருநகர் கடற்கரை வீதியிலுள்ள வீடு ஒன்றைச் சோதனையிட்டு அவ்வீட்டிலிருந்து சைக்கிள் ஒன்றைக் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின்பேரில் செல்லத்துரை செல்வன் என்பவரையும் கைதுசெய்து விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (கொ-கு)

## மரண அறிவித்தல்

### திரு. வ. சு. பாலசிங்கம்

கோண்டாவிலைச் சேர்ந்த திரு. வ. சு. பாலசிங்கம் (மலேரியா தடுப்பு இயக்கம், மாங்குளம்) 13-05-80ல் அகாலமரணமானார். இவர் திரு/திருமதி சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் புதல்வரும், தவமணியின் அன்புக் கணவரும், செந்தூர்வாசன், ஸ்ரீனிவாசன், ஸ்ரீசங்கர், பாபு, விஜி, சிவாஜினி ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார். கனகரத்தினம் (யாழ். கச்சேரி), குமாரசாமி (கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), குலசிங்கம் (இலங்கை வங்கி, பருத்தித்துறை), பராசக்தி, பாக்கியலட்சுமி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவர். நடராசா, கனகசபை (கமத்தொழில் சேவை நிலையம், கிளிநொச்சி), துரைராசா, ஸ்ரீபாலசிங்கம் (விற்பனைத் திணைக்களம், மானிப்பாய்), திலகவதி, புஸ்பராணி ஆகியோரின் மைத்துனருமாவர். பரமேஸ்வரி, மகேஸ்வரியின் சகலனுமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். 5779

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பிரவுண்வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மே 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under N CE/8948/78 The Eelanaadu, Post Box No 49, Telegram 'Eelanaadu, Phone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org